பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
06 07 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு சங்கங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. மகளிர் மற்றும் இளையோர் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. இன்னுயிர் காப்போம் திட்டம் உலக அளவில் புகழ் பெற்றுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது..

4. மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல், விளம்பரங்களுக்கு மட்டுமே திமுக அரசு முக்கியத்துவம் அளிப்பதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

>>>>>>><<<<<<<<

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு சங்கங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், ஆனந்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை அவர் பட்டியலிட்டார்.

கூட்டுறவுத்துறை இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<

மகளிர் மற்றும் இளையோர் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னை அருகே காட்டாங்கொளத்தூரில் நடைபெற்ற பிஜேபியின் பூத் வலிமைப்படுத்தும் பயணம் என்ற திட்டத்தின் மாநில அளவிலான பயிலரங்கத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மக்கள் நலனுக்காக மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக நிறைவேற்றிய திட்டங்களை மக்களிடையே கொண்டு சேர்க்க வேண்டும் என்றும் அவர் இக்கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்.

மக்களுக்கும், பிஜேபிக்கும் இடையேயான நல்லுறவை பூத் வாரியாக வலுப்படுத்த வேண்டுமென்றும் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டார்.

இந்த பயிலரங்கிற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. தமிழிசை சௌந்தரராஜன், பிஜேபி – அஇஅதிமுக கூட்டணியில் யாரும் பிளவை ஏற்படுத்த முடியாது என்றார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் இந்தக் கூட்டணி வெற்றிபெறும் என்றும் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<

விருதுநகர் மாவட்டத்தில் நேரிட்ட பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 4 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெற்றிலையூரணி கிராமத்தில் செயல்பட்டு வரும் தனியாருக்கு சொந்தமான இந்த பட்டாசு ஆலையில் வெடிவிபத்து நேரிட்ட செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்தவருக்கு ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<<

இன்னுயிர் காப்போம் திட்டம் உலக அளவில் புகழ் பெற்றுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்

சென்னையை அடுத்த வேலப்பன்சாவடியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – மா.சு 60 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<

மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல், விளம்பரங்களுக்கு மட்டுமே திமுக அரசு முக்கியத்துவம் அளிப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகம் முழுவதிலும் உள்ள ஊராட்சி பகுதிகளில் திமுக அரசை விளம்பரப்படுத்துவதற்காக எல்ஈடி திரை அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யாமல், உள்ளாட்சி அமைப்புகளின் நிதியை விளம்பரத்திற்காக பயன்படுத்துவது வேதனைக்குரியது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையை திமுக அரசு கைவிட வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

ஏழைக் குழந்தைகளின் ஊட்டச்சத்தையும், ஊழியர்களின் நலன்களையும் கருத்தில் கொள்ளாமல் அங்கன்வாடி மையங்களை மூடுவதில் மட்டுமே திமுக அரசு கவனம் செலுத்துவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாக கூறினார்.

>>>>>>><<<<<<<<

தமிழகத்தில் திமுக அரசு மக்கள் விரோத போக்கினை கடைபிடித்து வருவதாக த.மா.கா தலைவர் திரு. ஜி.கே. வாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

காவல்துறை விசாரணையின் போது ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறை கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் புதிதாக பல கட்சிகள் இடம்பெற வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு மொழியையும் திணிக்கும் வகையில் மத்திய அரசு செயல்படவில்லை என்றும் திரு. ஜி.கே. வாசன் கூறினார்.

>>>>>>><<<<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் வெயிலின் தாக்கம் அடுத்த 4 தினங்களுக்கு 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அளவுக்கு அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 45 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே கிணற்றுக்குள் தவறி விழுந்த மான் குட்டியை வனத்துறையினர் தீயணைப்பு துறையினருடன் இணைந்து பாதுகாப்பாக மீட்டனர்.

ஒரு மணிநேரத்திற்கும் மேலாக போராடி, மான் குட்டி மீட்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜசேகர பாரதி 26 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டத்தில் புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர் திரு. மூர்த்தி இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<<<

திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட அரியமலங்கலம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<<<

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் மாடவீதிகளில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை விரைந்து பூர்த்தி செய்யுமாறு ஆட்சியர் திரு. தர்பகராஜ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு இன்று மாலை முதல் வினாடிக்கு 58 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில் சாக்ஷி தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் **Minakshi** -யும் 80 கிலோ எடைப்பிரிவில் பூஜா ராணியும், ஆடவர் 85 கிலோ எடைப்பிரிவில் **Jugnoo-**வும், வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

>>>>>>><<<<<<<<

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியல் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் மகாராஜன் தங்கப்பதக்கத்தையும், சுனில் சிங் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>>><<<<<<<<

ஆசியா பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<<<

பெய்ஜிங்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் **Harvinder Singh** தங்கப்பதக்கத்தையும், மகளிர் பிரிவில் ஜோதி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>>><<<<<<<<

உகாண்டா பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீகுமார், சஷாங்குமார் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>><<<<<<<<

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

பர்மிங்காமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கடைசி நாளான இன்று, 608 ரன் எடுத்தால் இலக்கோடு இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிவரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 5 விக்கெட் இழப்புக்கு 123 ரன் எடுத்துள்ளது.

**>>>>>>>END<<<<<<<**